2022 மே 4]
மாண்புமிகு மீன்வளம்-மீனவர் நலத் துறை மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள்.

214—

மீன்வளக் கல்லூரி

*17822—திரு. அக்ரி. எஸ்.எஸ். கிருஷ்ணமூர்த்தி:

மாண்புமிகு மீன்வளம்-மீனவர் நலத் துறை மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருவண்ணாமலை மாவட்டம், சாத்தனூர் அணைப் பகுதியில் மீன்வளக் கல்லூரி துவக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. அனிதா R. ராதாகிருஷ்ணன், மீன்வளம்—மீனவர் நலத் துறை மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) திருவண்ணாமலை மாவட்டம், சாத்தனூர் அணைப் பகுதியில் மீன்வளக் கல்லூரி அமைக்கும் திட்டம் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. அக்ரி. எஸ்.எஸ். கிருஷ்ணமூர்த்தி அவர்கள்.

திரு. அக்ரி. எஸ்.எஸ். கிருஷ்ணமூர்த்தி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மழை நீரையும், மலை நீரையும் மனமுவந்து ஏற்று, விதவிதமாய் மீன்களைத் தினமும் முகர்ந்து, உற்று வாழும் மீனவர்களின் வாழ்க்கையை மேம்படுத்த வேண்டுமெனில், உள்நாட்டு மீன் வளத்தை மேம்படுத்த வேண்டியது அரசின் கடமையாகும்.

தமிழகத்தைப் பொறுத்தவரையில், பல்வேறு உள்நாட்டு நீர் வள ஆதாரங்களான, நீர்த்தேக்கங்கள், பெரிய, சிறிய பாசனக் குளங்கள், பருவ மழையால் நிரம்பும் குறுகியகால குளங்கள், குட்டைகள், ஆறுகள், கழிமுகங்கள் ஆகியவற்றின்மூலம் உள்நாட்டு மீன்வளம் அதிகரிக்கப்பட வேண்டிய காலகட்டத்தில்

உள்ளோம். மீன்வளப் பிரிவானது, கிராமப்புற மக்களுக்கு வேலைவாய்ப்புகளை உருவாக்குவதுடன், மாநிலத்தின் பொருளாதாரத்திற்குக் குறிப்பிடத்தக்க பங்களிப்பை வழங்குகிறது.

மீன், அதன் ஊட்டச்சத்து மற்றும் சுவைக்காக பொதுமக்களிடையே நல்ல வரவேற்பைப் பெற்றுள்ளது. மீனவர்களின் நலனுக்காக, ஒருங்கிணைந்த வளர்ச்சிக்காக, முழுமையான வளர்ச்சியை உறுதி செய்வதற்காக, மீன் வளத்தைப் பாதுகாத்தல், நிலையான மீன்பிடிப்பு மற்றும் மீன் வளர்ப்பு நடைமுறைகளை ஊக்குவித்தல் ஆகியவற்றின்மூலம் மீன் உற்பத்தியை அதிகரிக்க பல்வேறு, புதுமையான ஆராய்ச்சிகளை மேற்கொள்ள, மீன்பிடி படகுகளைப் பாதுகாப்பாக நிறுத்திட, மீன்பிடிக்கும் இடத்திலிருந்து அதன் நுகர்வு வரை சுகாதாரமான முறையில் கையகப்படுத்துவதை உறுதிப்படுத்த, . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் கேள்வியை மட்டும் கேளுங்கள். உங்களுக்கு என்ன வேண்டும் என்று சொல்லுங்கள்.

முற்பகல் 10—15

திரு. அக்ரி. எஸ்.எஸ். கிருஷ்ணமூர்த்தி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மீன்பிடித் துறைமுகம், மீன் இறங்குதளங்கள். . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: உங்கள் ஊரில் கடல் எங்கு உள்ளது? மீன்பிடித் துறைமுகம் அமைப்பதற்கு?

திரு. அக்ரி. எஸ்.எஸ். கிருஷ்ணமூர்த்தி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மீன் சந்தைகளை நவீனப்படுத்திட, கால்நடை ஆராய்ச்சி மையம், கால்நடை. . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இன்னும் ஒரு கேள்வி உள்ளது. இந்தக் கேள்வியை முடியுங்கள்.

திரு. அக்ரி. எஸ்.எஸ். கிருஷ்ணமூர்த்தி: முடித்துவிடுகிறேன். ஆராய்ச்சி மையம், கல்லூரிகளின் பங்களிப்புத் தேவைப்படுகிறது. திருவண்ணாமலை மாவட்டத்தைப் பொறுத்தவரை, சாத்தனூர் அணையானது உள்நாட்டு மீன் வளத்திற்குச் சிறந்த நீர்வள ஆதாரமாக விளங்கி வருகிறது.

2022 மே 4]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *அங்கு என்ன செய்ய வேண்டும் என்று சொல்லுங்கள். சாத்தனூர் அணைக்கட்டில் என்ன செய்ய வேண்டும் என்று சொல்லுங்கள்.*

திரு. அக்ரி. எஸ்.எஸ். கிருஷ்ணமூர்த்தி: *செண்பகத்தோப்பு அணை, மிருகண்டா நதி அணை, குப்பனத்தம் அணை, தென்பெண்ணையாறு, செய்யாறு ஆகிய ஆறுகளும் இம்மாவட்டத்தில் தமிழ்நாட்டு நீர்வள ஆதாரமாக உள்ளன. எனவே, இப்பகுதியின் வளர்ச்சிக்காக, இந்தப் பகுதியில் வாழ்ந்து கொண்டிருக்கின்ற மீனவ இன மக்களுக்காக, இந்த மாவட்டத்தில் அரசின் சார்பில் ஒரு மீன்வளக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி மையம் அமைத்துத் தரப்படுமா என்று மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *கல்லூரி, ஆராய்ச்சி மையம் அமைத்துத் தரப்படுமா? அவ்வளவுதானே? மாண்புமிகு மீன்வளம்-மீனவர் நலத் துறை மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. அனிதா R. ராதாகிருஷ்ணன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்ட கேள்வி, எங்கள் ஊரில் மீன்வளக் கல்லூரி அமைக்கப்படுமா? இதற்கு ஒவ்வோர் அணையாகச் சொல்லிக்கொண்டிருக்கிறார்கள்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு அமைச்சர் பதில் சொல்லிவிடுங்கள்.*

மாண்புமிகு திரு. அனிதா R. ராதாகிருஷ்ணன்: *ஒரு மீன்வளக் கல்லூரி தொடங்க வேண்டும் என்று சொன்னால் குறைந்தது 65 ஏக்கர் நிலமும், உட்கட்டமைப்பு வசதிகளும் வேண்டும். மேலும், ஊதியம் மற்றும் தொடர் செலவினங்களுக்கு ரூ.110 கோடி நிதியும் தேவைப்படுகிறது. தமிழ்நாடு மீன்வளப் பல்கலைக்கழகத்தில் தற்போது தூத்துக்குடி மாவட்டத்தில் தூத்துக்குடியிலும், இராமநாதபுரம் மாவட்டத்தில் மண்டபத்திலும், நாகப்பட்டினம் மாவட்டத்தில் நாகப்பட்டினத்திலும், தலைஞாயிறிலும், செங்கல்பட்டு மாவட்டத்தில் வாணியஞ்சாவடி மற்றும் முட்டுக்காட்டிலும், திருவள்ளூர் மாவட்டத்தில் பொன்னேரி, மாதவரம் ஆகிய இடங்களிலும் மீன்வளம் சார்ந்த*

படிப்புகளுக்கான கல்லூரிகள் செயல்பட்டு வருகின்றன. இந்தக் கல்லூரிகளில் அனைத்து மாவட்டங்களைச் சார்ந்த மாணவர்களும் பயின்று வருகின்றனர் என்பதைத் தங்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. அக்ரி. எஸ்.எஸ். கிருஷ்ணமூர்த்தி அவர்கள்.*

திரு. அக்ரி. எஸ்.எஸ். கிருஷ்ணமூர்த்தி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முன்னாள் முதலமைச்சர் எங்களுடைய இதய தெய்வம் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்களால் தமிழகத்தில் 1977 ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் முதன்முதலாக தூத்துக்குடியில் மீன்வளக் கல்லூரி ஆரம்பிக்கப்பட்டது. அதற்குப் பிறகு புரட்சித் தலைவர் அவர்களின் தடம் பார்த்து ஆட்சி புரிந்த மாண்புமிகு முன்னாள் முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள். . .*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் தயவுசெய்து கேட்டுக்கொள்ளுங்கள். திருவண்ணாமலை மாவட்டத்தில் மீன்வளக் கல்லூரி அமைப்பது குறித்து கேள்வி. அதற்கு முன்பு நடந்த வரலாறு எல்லாம் பேச வேண்டாம். என்ன செய்ய வேண்டும் என்று சொல்லுங்கள். மறுபரிசீலனை செய்யச் சொல்லுங்கள். (குறுக்கீடு) மறுபரிசீலனை செய்வீர்களா என்று கேளுங்கள்.*

திரு. அக்ரி. எஸ்.எஸ். கிருஷ்ணமூர்த்தி: *சரி. இந்தியத் திருநாட்டிலேயே முதன்முதலாகத் தமிழகத்தில். . .*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மறுபடியும் வரலாறுதான் படிக்கிறீர்கள். தயவுசெய்து நான் சொல்கிறேன்–திருவண்ணாமலை மாவட்டத்தில் கல்லூரி கேட்டீர்கள். (குறுக்கீடு) மாண்புமிகு அவை முன்னவர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. துரைமுருகன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கேள்வி நேரம் இப்படியே நீண்டு போகின்றது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சாத்தனூர் அணை பக்கத்தில் ஒரு மீன்வளக் கல்லூரி அமைக்கப்படுமா? இது கேள்வி. அதற்கு உடனே பதில் என்ன சொல்ல வேண்டும்? மாண்புமிகு அமைச்சர் அவர்களும் ஊரில் உள்ள கதையெல்லாம் சொல்லக்*

2022 மே 4]

கூடாது. அப்படிப்பட்ட கருத்துரு அரசின் பரிசீலனையில் இல்லை. அவ்வளவுதான். முடிந்துவிட்டது. இரண்டாவது கேள்வியில் அவர் என்ன கேட்கவேண்டும்? நிறைய மாணவர்கள் இருக்கிறார்கள், எனவே அங்கு கல்லூரி அமைக்கப்படுமா என்று கேட்க வேண்டும். அது உண்டா, இல்லையா என்றுதான் பதில் சொல்வார்கள். அவ்வளவுதான். ஆனால் தற்போது இந்தப் பிரகாரம் என்னவென்றால், அந்த லோகத்தில், இந்த லோகத்தில் என்று ஆரம்பித்தால் எப்போது முடிவது? ஆகவே, பட், பட் என்று அடியுங்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு அவை முன்னவர் அவர்கள் சொன்ன கருத்து இந்த அவையில் எல்லோருக்கும் பொதுவானது. அதை மனதில் வைத்து கேள்வியும், பதிலும் அவ்வாறு அமைய வேண்டும் என்று என்னுடைய விருப்பத்தினையும் தெரிவித்துக்கொள்கிறேன். மாண்புமிகு உறுப்பினர் திரு. அக்ரி. எஸ்.எஸ். கிருஷ்ணமூர்த்தி அவர்கள்.*

திரு. அக்ரி. எஸ்.எஸ். கிருஷ்ணமூர்த்தி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தற்போது கடலோர மாவட்டங்களில் மட்டுமே மீன்வளக் கல்லூரிகள் செயல்பட்டுக் கொண்டிருக்கின்றன. உள்நாட்டு மீன்வளத்தைப் பெருக்கும்முகமாக புதிய மீன்வளக் கல்லூரிகளை அமைப்பதன்மூலம் கல்வியில் சிறப்புத் தன்மை, ஆராய்ச்சியில் தனித் தன்மை, எல்லோரையும் உள்ளடக்கிய வளர்ச்சி என்ற மூன்று இலக்குகள்மூலம் இளைஞர்களை மீன் வளர்ப்பு மற்றும் மீன்வளம் சார்ந்த தொழில்முனைவோர்களாக ஆக்குவதற்காகவும், ஆலோசகர்களாக ஆக்குவதற்காகவும், திறன்சார்ந்த கல்வி அளிப்பதற்காகவும், உள்தர அளவீடு அமைப்புமூலம் கல்வி அளிப்பதற்காகவும், ஆழ்கடல் மீன்பிடிப்பதற்காகவும் போன்ற பல்வேறு வசதிகளைப் பெற்றிட திருவண்ணாமலை மாவட்டத்தில், சாத்தனூர் அணைப் பகுதியில் அல்லது மீனவர் சமுதாயம் மிகுந்த போளூர் சட்டமன்றத் தொகுதியில் ஏதாவது ஒரு பகுதியில் அரசு மீன் வளக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி மையத்தை அரசு அமைத்துத் தருமா என்று மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் மூலமாக மாண்புமிகு மீன்வளம்–மீனவர் நலத் துறை மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்களைக் கேட்டு அமர்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு மீன்வளம்–மீனவர் நலத் துறை மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள்.*

முற்பகல் 10—20

மாண்புமிகு திரு. அனிதா R. ராதாகிருஷ்ணன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மீன்பிடித் தொழில் மற்றும் அதற்கான பாடத் திட்டங்கள் பெரும்பாலும் கடல் வளத்தைச் சார்ந்தே அமையப் பெற்றுள்ளன. திருவண்ணாமலை மாவட்டம், சாத்தனூர் பகுதியில் உள்நாட்டு மீன் தொழில் மட்டுமே மேற்கொள்ளப்பட்டு வருகிறது. எனவே, மீன்வளக் கல்லூரி அமையும்பட்சத்தில், மாணவர்கள் கடல் மீன்பிடித் தொழில் குறித்த படிப்புகள் மேற்கொள்வது இயலாது என்பதால், திருவண்ணாமலை மாவட்டத்தில் மீன்வளக் கல்லூரி அமைக்கும் சாத்தியக்கூறுகள் இல்லை. தேவைப்படும்பட்சத்தில் அம்மாவட்டத்தில் உள்நாட்டு மீன்வள ஆராய்ச்சி நிலையம் அமைக்க மாண்புமிகு தமிழகத்தின் முதலமைச்சர் அவர்களுடைய ஆலோசனையும் அனுமதியும் பெற்று நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தங்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கின்றேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 215, மாண்புமிகு உறுப்பினர் திரு. இ. கருணாநிதி, மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.*

215—

துணை மின் நிலையம்

*59329—திரு. இ. கருணாநிதி:

மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பல்லாவரம் தொகுதி, அஸ்தினாபுரம் பகுதியில் துணை மின் நிலையம் அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

TRUTH ALONE TRIUMPHS